பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 08 வெள்ளிக்கிழமை 21.01.2022 கதிர் 304

## துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் சாவு!

மிதிகம பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துர்கி கிராமத்தில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2

# கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நள்ளிரவு பாரிய தீ; சிகிச்சை நிலையங்கள் உட்பட 5 பகுதிகள் எரிந்து நாசம்





கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்றிரவு 11.45 மணியளவில் பரவிய பாரிய தீ பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இராணுவத் தீயணைப்புப் பிரிவினரும் களத்தில் இறங்கி மேலும் தீ பரவாத வகையில் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டு வரும்

2

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து காரைநகரில் போராட்டம்

## கோட்டாவுக்கும், டக்ளஸுக்கும் மகஜர்





(எஸ்.நிதர்ன், இ.கலையமுதன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக்கண்டித்தும்,அவற்றைக்ட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் காரைநகர் பிரதேச கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும், யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்தன.

2

## அரசை விரட்டியடிப்பது எமது நோக்கம் அல்ல!

### வீழ்ந்தவர்களை எழுப்புவதுதான் தமக்குத் தேவை என்கிறார் ரணில்



அரசைப் பாதுகாக்கவோ அல்லது கவிழ்க்கவோ அல்லது விரட்டியடிக்கவோ தாம் வரவில்லை எனவும், வீழ்ந்தவர்களை எழுப்புவதுதான் தமக்குத் தேவை எனவும் முன்னாள் பிரதமரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

2

## இரும்புக் கம்பியால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை!

இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பதுளை எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுக்கொடை தோட்டத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இருக்கொட தோட்டம், உடு கும்பல்வெல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயது குடும்பஸ்தரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

2

## முதலில் கோட்டாவின் மனம் மாறவேண்டும்



### அப்போதுதான் பிரச்சினைகள் தீரும் என்கிறார் சிறிதரன் எம்.பி.

தான் இன்னமும் இராணுவ சிந்தனை வாதத்துக்குள்தான் இருக்கிறார் என்பதையும், நீதியான, நியாயமான வழியில் செல்வதற்குத் தயாரில்லை என்பதையுமே கொள்கை விளக்க உரைமூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

2

## சு.க. பொறுப்புடன் செயற்பட வேண்டும்

### அமைச்சர் நாமல் வலியுறுத்து

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

உள் விவகாரங்கள் ஏதேனும் இருந்தால், அவை அமைச்சரவைக் கூட்டத்திலோ,

2

### நாளை புலமைப்பரிசில் பரீட்சை!

## கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள மாணவர்களுக்கு விசேட நிலையங்கள்

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில், கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள பரீட்சார்த்திகளுக்கு விசேட நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்று பரீட்சைகள்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சு.க. பொறுப்புடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச கட்சிக் கூட்டத்திலோ அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டத்திலோ மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும் என்று அரசியல் தலைமைகள் கவனத்தில்கொள்ள வேண்டும் - என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லாமல் தற்போதைய நிர்வாகம் முன்னோக்கிச் செல்ல முடியுமா என ஊடகவியலாளர்கள் வினவியபோது, தனிநபர்கள் ஆட்சி செய்வதற்காகப் பொதுமக்கள் வாக்களிக்கவில்லை என்றும், தெரிவுசெய்யப்பட்ட அரச தலைவரின் கொள்கைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் நாமல் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொறுப்புடன் செயற்படுமாயின் பிரஜைகள் அறிவார்கள் என்று தெரிவித்த அவர், அரச அரசியல்வாதிகள் என்ற வகையில் கருத்துக் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு என்றும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிக் கூட்டணியாகப் போட்டியிடுவதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இந்தத் தீர்மானம் தமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விருப்பம் என்றும் தெரிவித்தார்.

## கொரோனாத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளரான அமித் ஜயசுந்தர கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலையில் விடுவதும், பாடசாலை மாணவர்களை தேர்வு மையத்திற்கு அழைத்துச் செல்வதும் பொதுவான செயல்முறையாகும் என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், மாணவர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தால், அவர்களின் பெற்றோர் அவர்களை விசேட தேர்வு மையங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குச் சென்று பெற்றோர்கள் விசேட நிலையங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மாணவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருப்பின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர்கள் அன்டிஜன் சோதனை அல்லது பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், மாணவர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக சந்தேகிக்கப்பட்டாலும், நேர்மறை சோதனை செய்யவில்லை என்றால், விசேட மையங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு அவர் பெற்றோரிடம் கேட்டுக்கொண்டார்.

தனிமைப்படுத்தல் அல்லது கொரோனா அறிகுறிகளைக்கொண்ட விண்ணப்பதாரர்களுக்குத் தனியான விசேட வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரும்புக் கம்பியால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் தாக்குதலில் காயமடைந்துள்ள நிலையில் பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசை விரட்டி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு :-

அண்மையில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை அந்நியச் செலாவணி நெருக்கடியை மட்டுமே சுட்டிக்காட்டியுள்ளது. வேறு எதுவும் பேசவில்லை. மற்றும் நீண்ட கால தீர்வுகள் தேவை. தான் பொறுப்பேற்ற போது ஏழரை பில்லியன் டொலர் கடனாக இருந்தது என ஜனாதிபதி கூறுகின்றார்.

நம் பிரச்சினைகளுக்குக் காரணம் கடன் அல்ல. கடந்த கால விடயங்களால் நமக்கு எந்தப் பயனும் இல்லை. நாங்கள் அரசைப் பாதுகாக்கவோ அல்லது கவிழ்க்கவோ இங்கு வரவில்லை. வீழ்ந்தவர்களை எழுப்புவதுதான் நமக்குத் தேவை - என்றார்.

## முதலில் கோட்டாவின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2019 நவம்பர் 18 ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவின்போது ஜனாதிபதி உரையாற்றியிருந்தார். அதன்பின்னர் 2019 நவம்பர் 30 ஆம் திகதி இந்தியாவுக்குச் சென்று திரும்பும்வேளை இந்து நாளிதழுக்கு நேர்காணலொன்றை வழங்கியிருந்தார். 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவ கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி கொள்கை விளக்க உரையாற்றினார். 2022 ஜனவரி 18ஆம் திகதி 9 ஆவது நாடாளுமன்றத்தின் 2ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரையாற்றினார்.

அன்று முதல் இன்றுவரை அவரின் உரைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்தோம். இந்நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றனர் என்பதையும், தமிழர்கள் என்கிற தேசிய இனத்தின் அடிப்படை அபிலாகைகளையும் அவர் தூக்கி கடாசிவிடும் வகையிலேயே செயற்பட்டுள்ளார். குறிப்பாக தன்னுடைய மனதில்கூட அதனை சொல்ல முடியாத தலைவராகவே அவர் இருக்கின்றார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதியின் உரையொன்பது, அனைவரையும் அரவணைத்து, ஒன்றிணைக்கும் வகையில் அமைய வேண்டும். ஆனால், ஒரு தலைவனின் உரையாக ஜனாதிபதியின் உரை அமையவில்லை. தன்னுடைய இராணுவ சிந்தனை வாதத்துக்குள், தான் வைத்திருந்த துப்பாக்கி முனைக்குள் மட்டும்தான் தன்னுடைய சிந்தனை இருப்பதாகவே அவரது பேச்சு அமைந்துள்ளது.

அதாவது நீதியான - நியாயமான வழியில் செல்வதைற்கு தயாரில்லை என்பதைத்தான் அவரது உரை குறிப்பிடுகின்றது. இந்நாடு சீரான பாதையில் நேர்த்தியாக செல்ல வேண்டுமானால், இனப்பிரச்சினை தீரவேண்டுமானால் தன்னுடைய மனதை ஜனாதிபதி முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாட்டின் இறைமையும், மக்களின் வாழ்க்கையும் பொருளாதாரமும் மேம்படும் - என்றார்.

## இந்திய மீனவர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரைநகர் பிரதேச சபையின் முன்பாக காலைபோராட்டத்தை முன்னெடுத்த மீனவர்கள், பின்னர் அங்கிருந்து பிரதேச செயலகம் வரையில் பேரணியாகச் சென்றனர்.

பிரதேச செயலகத்துக்குப் பேரணியாகச் சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கான மகஜர்க ளையும் கையளித்தனர்.

போராட்டக்காரர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதால் எமது கடல் வளங்களும், கடல் சூழலும், எமது உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகின்றன.

அதனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகச்சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தோம். பல தரப்புக்களிடமும் மகஜர்களைக் கையளித்திருந்தோம். இருந்தும் இன்று வரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை .

வெளிநாட்டு மீனவர்கள் ஒழுங்கப்படுத்தல் தடைச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும், உள்ளூர் இழுவைமடிதொழில்சட்டத்தைநடைமுறைப் படுத்தல் வேண்டும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக்கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபா. அதற்கான நட்டஈடுகளைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

மலர்ந்துள்ள இந்த வருடத்துக்குள் எமக்குத் தீர்வைப் பெற்றுத்தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், கடல் வளத்தையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

## கிளிநொச்சி பொது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் குறித்த விபத்தால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் மார்பு நோய் சிகிச்சை நிலையம், பாலியல் நோய் சிகிச்சை நிலையம், பரிசோதனை அறை, களஞ்சிய அறை, வைத்தியர் சிகிச்சை அறை ஆகியன தீயால் எரிந்து நாசமாகியுள்ளன எனவும் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச்சூட்டில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த 46 வயதுடைய குடும்பஸ்தர் வலான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும், அவரைக் கைதுசெய்ய விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது எனவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்
செம்மண் 78 ஆவது இதழ்
வெளிவந்துவிட்டது வாசித்துவிட்டீர்களா?

- ஜல்லிக்கட்டு என்கிற அன்பு கலந்த வீரம்
- வானூர்தியின் சக்கரம் தண்டவாளத்தில் தேயுமானளவுக்குத் தாழப் பறந்தேன்
- அச்சம் தரும் தமிழர் பெருக்கம்
- கோவா வறை
- மனம் தொட்ட சினிமா
- குட்டி போடும் குட்டி ரோபோ...!
மேலும் பல சுவையான அம்சங்களுடன்
உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்
076 443 8622

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் எச்சரிக்கை

**இலங்கையின் மூத்த அரசியல் பிரமுகர் ரணில் விக்கிரமசிங்க. நான்கு தடவைகள் பிரதமராக இருந்தவர். 45 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர். நாடு கையாள வேண்டிய இராஜதந்திர, பொருளாதார விடயங்கள் குறித்த நன்கு அறிந்தவர். பரிச்சயமுள்ளவர்.**

**மிகுந்த நெருக்கடியிலும் சிக்கலிலும் இருக்கும் நாட்டின் பொருளாதாரம் குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் முக்கியமான சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். அவை கவனிக்கப்பட வேண்டியவை.**

**நாட்டின் இந்த இக்கட்டு நிலைமைக்கு கொவிட் தொற்றை மட்டும் காரணமாகக் காட்டித் தப்பிவிட முடியாது என்று அவர் சுட்டுகின்றமை முழுவதும் உண்மை.**

**கொவிட் நெருக்கடி ஏற்படுத்திய அசாதாரண பொருளாதாரப் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் நமது பிராந்தியத்தில் உள்ள பல நாடுகள் தத்தமது அந்நிய செலாவணிக் கையிருப்பை உயர்த்திக் கொண்டுள்ளன என்பதை அவர் விளக்கியுள்ளார்.**

**நாளொரு நாட்டிடம் கடன், பொழுதொரு தேசத்திடம் உதவி என்று இனிமேலும் கையேந்திக் கொண்டு மட்டும் ஆட்சியைத் தொடர முடியாது என்பதைச் சுட்டிக் காட்டும் ரணில் விக்கிரமசிங்க, திட்டவட்டமான முடிவுக்கு ஆட்சியாளர்கள் வருகின்றமை காலத்தின் கட்டாயம் என்கிறார்.**

**நாட்டின் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அரசு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடப் போகின்றதா, இல்லை வேறு ஏதும் மாற்றுத் திட்டங்களைக் கொண்டிருக்கின்றதா என்பதைக் குறைந்த பட்சம் அடுத்த மாதத்துக்குள்ளாவது நிதி அமைச்சர் நாட்டு மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் தெளிவுபடுத்த வேண்டும், இப்படியே காலத்தை இழுத்துச் செல்ல முடியாது, செல்லக் கூடாது என்று அவர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியிருக்கின்றார்.**

**பொருளாதார விவகாரத்தால் எல்லாப் பக்கமும் நாடு முடங்கிப் போய்க் கிடக்கின்றது. ஆனால் 'இதிலிருந்து மீளும் மார்க்கம் குறித்து – ஏதேனும் திட்டம் பற்றி – ஆளும் தரப்பு உருப்படியான கருத்து எதனையும் முன்வைப்பதாக இல்லை.**

**இந்த நெருக்கடிக் காலத்தில் விடயங்களையும் கையாள்வது பற்றியும் அங்கு, இங்கு எனப் பல நாடுகளிடம் கடன் வாங்குகின்றமை குறித்துமே அதிகம் பேசப்படுகின்றது. பிரஸ்தாபிக்கப்படுகின்றது. அதற்கு மேல் இதிலிருந்து முழுமையாக மீளுவதற்கான வழிவகைகள் குறித்து யாரும் பேசுபவர்களாக இல்லை.**

**ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டுகின்றமை போல தமது அரசின் கொள்கை விளக்கப் பிரகடன உரையை கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய அரசுத் தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கூட, நாட்டின் நெருக்கடிகளைப் பற்றி விவரித்தாரே தவிர, இந்த நெருக்கடிகளைத் தாண்டுவதற்கு – கடப்பதற்கு – அரசு கொண்டிருக்கும் திட்டங்கள் குறித்து ஏதும் பிரஸ்தாபிக்கவேயில்லை.**

**இதற்கிடையில் அரச வருமானத்தை ஈட்டுவதற்காக புதிதாகக் கொண்டு வர எண்ணியிருக்கும் பொருள்கள் – சேவைகளுக்கான விசேட வரி (ஜி.எஸ்.ரி) குறித்தும் அரசைக் கடுமையாகச் சாடியிருக்கின்றார் ரணில்.**

**எந்த நாட்டிலும் பெறுமதி சேர் வரி (வற் வரி) இருக்கும் போது மேலதிகமாக ஜி.எஸ்.ரி. வரி விதிப்பதில்லை. ஏனெனில் ஒரே விதமான பொருள்களுக்கான அல்லது சேவைகளுக்கான வரிதான் இரண்டுமே என்று ரணில் சுட்டுகின்றமை சரியானதுதான்.**

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை மீறி –அல்லது அதன் சம்பந்தம் இல்லாமல் – ஜி.எஸ்.ரி. வரியை அறவிட முனைவதும், அதற்காக நிதி அமைச்சுக்கு விசேட நிதி, நீதி அதிகாரங்களை வழங்கும் விதமான ஏற்பாடுகளைக் கொண்டு வருவதும் மேலும் பல குழப்பங்களை ஏற்படுத்தும் என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுவது உரிய ஆபத்து எச்சரிக்கைதான்.**

# அரசாங்கம் பெற்றுக்கொண்ட ஆணையைவிட தமிழர்கள் எமக்களித்த ஆணை மேலானது!

## ஜனாதிபதிக்கு நினைவூட்டினார் கஜேந்திரகுமார்

தமிழர் தேசத்தை வலியுறுத்தி தமிழ் மக்கள் எமக்கு கொடுத்த ஆணை, அரசாங்கங்கள் பெற்றுக்கொண்ட ஆணையை விடவும் மேலானது என்பதை ஜனாதிபதி நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, தமிழர் ஆணையை மீறி கொள்கையை வெளியில் வைத்துவிட்டு வரத் தயாரில்லை எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு இன்று முகங்கொடுத்து வருகின்றோம். அரசாங்கம் இப்போது தனது நிலை பாட்டை மாற்றிக்கொள்ளாது போனால் விரை வில் நாடு வங்குரோத்து நிலைமைக்குத் தள்ளப்படும்.

கடன்களை செலுத்திக்கொண்டிருக்க முடியும். ஆனால் கையிருப்பு வீழ்ச்சிகாணும் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். எனவே, அதற்காகவேணும் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.

மேலும், ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததற்கான காரணம் என்ன என்பதைத் தெரிவிப்பார் என எதிர்பார்த்தோம். ஒரு வார காலத்துக்கு நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார். ஆனால் மீண்டும் நாடாளுமன்றம் கூடிய வேளையில் ஏன் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்பதற்காக பதில் தெரிவிக்கவில்லை. பொருளாதார நெருக்கடியே இன்று நாடு எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாகும்.

ஆனால் பொருளாதார நெருக்கடிக்காக அவ்வாறு செய்யவில்லை. எனினும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களைச் செய்யாது தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஒரே விடயத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதால் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை.

அதேபோல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதில் ஜனாதிபதிக்கு மாற்று சிந்தனையொன்று இருக்கும் எனவும், அது அவரது மனதில் இருந்து வெளிவரும் எனவும் வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளாக நாம் ஜனாதிபதியின் உரையில் எதிர்பார்த்தோம்.

குறிப்பாக நாடாளுமன்றம் மீண்டும் கூடிய வேளையில் புதிய அரசமைப்பு ஒனறை உருவாக்குவது, சகல மக்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

இறுதியாக உருவாக்கப்பட்ட மூன்று அரசமைப்புகளையும் தமிழர்கள் நிராகரித்த நிலையில், அல்லது தமிழர்கள் முழுமையாக நிராகரிக்கப்பட்ட நிலையில் கடந்த 74 ஆண்டுகளாக நாடு அடிப்படைக் கட்டமைப்பில் பாரிய



சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் அதனைத் தீர்க்கும் விதமாக ஜனாதிபதியின் உரை இருக்கும் என எதிர்பார்த்தோம். அதுமட்டுமல்ல, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருளாதார ரீதியில், கல்வி, தொழில் வாய்ப்பு, சந்தைவாய்ப்பு, சுய தொழில், குடிதண்ணீர்; மற்றும் விவசாயம், வீடு, வீதிகள், வைத்தியசாலைகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனக் கூறினார். இதற்காக வடக்கு கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் தமது கொள்கைகளைத் தற்காலிகமாகக் கைவிட்டு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தில் ஆட்சியை அமைத்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் 60 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஆட்சிய மைத்துள்ளனர்.

ஆனால், வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சியின் ஆசனங்களில் அமர, தமிழ் மக்களின் ஆணையைக் கேட்ட வேளையில், சமஷ்டி முறையில் தீர்வுகளைப் பெறுவது மற்றும் தமிழர் தேசத்தை அங்கீகரிக்கத் தமிழ் மக்கள் எமக்குக் கொடுக்கின்ற ஆணை, அரசாங்கங்கள் பெற்றுக்கொண்ட ஆணையை விடவும் மேலானது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் கொடுத்த ஆணை 75 வீதத்துக்கும் அதிமாகும். ஆகவே, ஜனாதிபதி தமிழ் மக்கள் கொடுத்த ஆணையை மறந்துவிட்டு வழமையான இனவாத நடவடிக்கைகளை முன்னெடுக்கவே நினைத்துள்ளார். ஆனால், எமது மக்கள் எமக்குக் கொடுத்த ஆணையை ஒருபோதும் நாம் மீறமாட்டோம். இந்த ஆணைக்காக நாம் இழந்தவை அதிகம், இனப்படுகொலைக்குப் பின்னரும் எமது மக்கள் உறுதியான ஆணையை எமக்கு வழங்கியுள்ளனர். எனவே, அதனைக் கைவிட்டு எம்மால் எதனையும் செய்ய முடியாது.

அரசாங்கத்தால் மாற்றமொன்றை ஏற்படுத்த முடியாது, ஆனால், எதிர்க்கட்சியாலும் மாற்றமொன்றை உருவாக்க முடியாதுள்ளது. எதிர்க்கட்சியும் இனவாத கொள்கையில் மேலும் மேலும் ஒற்றையாட்சியை வலுப்படுத்தும் இறுக்கமான கொள்கையில்தான் பயணிக்கின்றது.

ஆகவே, இவ்வாறான நிலையில் எந்தவொரு கட்சிக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கப் போவதில்லை. எதிர்க்கட்சித் தலைவரும் தெளிவான கொள்கையைத் தெரிவிக்காத வகையில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, அரச கட்டமைப்பில் மாற்றத்தை உருவாக்குவதே அவசியமான மாற்றமாக இருக்கும். என்றார்.

# பூஜித விடுதலை; பெப்ரவரியில் முடிவு

நிலையான உளவுத்தகவல்கள் கிடைத்தும் 21-4 உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவை, அவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதா அல்லது, பிரதிவாதித் தரப்பு சாட்சியங்களை ஆராய அனுமதியளிப்பதா என்பது தொடர்பான தீர்மானம் அடுத்த மாதம் அறிவிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதி இது தொடர்பான நீதிமன்றின் தீர்மானத்தை அறிவிப்பதாக, இந்த வழக்கை விசாரிக்க என அமைக்கப்பட்டுள்ள கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே தலைமையிலான, மேல் நீதிமன்றின் ஆதித்ய பட்டபெதிகே மற்றும் மொஹம்மட் இஸ்ஸதீன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் அறிவித்தது.

இந்த வழக்கை விசாரிக்க விடே ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கு அந்த நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வியாழக்கிழமை விசாரிக்கப்பட்டது. இதன்போது, முறைப்பாட்டாளர் தரப்பின் சாட்சி நெறிப்படுத்தலை முடித்துக்கொள்வ தாக, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் அறிவித்தார். இதனையடுத்தே விடயங்களை ஆராய்ந்த நீதிபதிகள், வழக்கிலிருந்து பிரதிவாதி பூஜித் ஜயசுந்தரவை விடுதலை செய்வதா அல்லது பிரதிவாதி தரப்பு விடயங்களை ஆராய அனுமதிப்பதா என்பது குறித்த தீர்மானத்தை பெப்ரவரி 18 ஆம் திகதி அறிவிப்பதாகத் தெரிவித்தனர்.

# இந்தோனேஷியாவின் புதிய தலைநகருக்கு ‘நுசாந்த்ரா’ என சூட்டப்பட்டது பெயர்!



இந்தோனேஷியாவின் புதிய தலைநகருக்கு நுசாந்த்ரா என பெயரிட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜகார்த்தா எதிர்கொள்ளும் மிகப்பெரிய சுற்றுச்சூழல் சவால்களை விடுவிப்பதற்கும், செல்வத்தை மறுபங்கீடு செய்வதற்கும் 2019இல் இந்தோனேசியாவின் தலைநகரை மாற்றுவதற்கான திட்டத்தை ஜனாதிபதி ஜோகோ விடோடோ முதலில் அறிவித்தார். தொற்றுநோய் காரணமாக இந்த நடவடிக்கை தாமதமானது,

இந்தநிலையில் தற்போது இந்த புதிய பெயர் 80இற்கும் மேற்பட்ட விருப்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் இது இந்தோனேசியாவின் புவியியலைப் பிரதிபலிப்பதால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இது சர்வதேச அளவில் சின்னமாக இருந்தது என்று தேசிய வளர்ச்சி திட்டமிடல் அமைச்சர் சுஹார்சோ மோனோர்ஃபா கூறினார்.

இந்த அறிவிப்பு, 10 மில்லியன் மக்கள் வசிக்கும் நகரமான ஜகார்த்தா மீதான சுமையை குறைக்கும் என்று அரசாங்கம் நம்புகிறது.

புதிய தலைநகரை உருவாக்க இரண்டரை லட்சம் ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வரும் 2024ஆம் ஆண்டு நுசாந்த்ரா புதிய தலைநகர் மற்று மின்றி நிறுவனங்கள், வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான இருப்பிடமாக இருக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது


தீவுக்கூட்டம் முழுவதையும் குறிக்க நுசந்தரா பயன்படுத்தப்படுவதால், தேர்வு குழப்பமானதாக இருக்கலாம் என்று சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். கலிமந்தனில் புதிய தலைநகரம் கட்டப்படும்போது பழைய ஜாவானியச் சொல்லான நுசன்தாரா ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று மற்றவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

செவ்வாய்கிழமையன்று புதிய தலைநகர் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்த பிறகு, இந்த ஆண்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கலாம். 2024ஆம் ஆண்டுக்குள் புதிய தலைநகரை கட்டமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டத்தின் கீழ், ஜகார்த்தா நாட்டின் வணிக மற்றும் நிதி மையமாக இருக்கும், ஆனால் அரசாங்க நிர்வாக செயற்பாடுகள் ஜகார்த்தாவிலிருந்து வடகிழக்கே சுமார் 2,000 கிமீ (1,250 மைல்) கிழக்கு காலிமந்தனுக்கு நகரும். புதிய தலைநகரம் வடக்கு பெனாஜாம் பாசர் மற்றும் குடாய் கர்தனேகரா பகுதிகளில் அமையும்.

சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்த நடவடிக்கையானது கிழக்கு காளிமந்தனில் மாசுபாட்டை விரைவுபடுத்தும் மற்றும் ஒராங்குட்டான்கள், கரடிகள் மற்றும் நீண்ட மூக்கு குரங்குகளின் இருப்பிடமான மழைக்காடுகளின் அழிவுக்கு பங்களிக்கும் என்று எச்சரித்துள்ளனர்.

2050ஆம் ஆண்டுக்குள் தற்போதைய தலைநகர் ஜாகர்தா முற்றிலும் நீருக்குள் மூழ்கி விடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது



## உக்ரைன் மீது படையெடுத்தால் ரஷ்யா பேரழிவைச் சந்திக்கும்! பிடன் எச்சரிக்கை



உக்ரைன் மீது படையெடுக்கப்பட்டால் அதற்கு முழு பொறுப்பு ரஷ்யா தான் என அமெரிக்க அதிபர் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உக்ரைன் மீது படையெடுத்தால் ரஷ்யா பேரழிவை சந்திக்கும். ரஷியாவுக்கும் அதன் பொருளாதாரத்திற்கும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்த எங்கள் கூட்டாளிகள் தயாராக உள்ளனர்.

60 கோடி டொலர் மதிப்பிலான அதிநவீன ஆயுதங்களை உக்ரைனுக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளேன். உக்ரைனுக்குள் நுழைய ரஷிய படைகள் உண்மையான விளைவுகளையும் மிகப்பெரிய மனித உயிரிழப்புகளை விலையாக கொடுக்க நேரிடும்.உக்ரைன் எல்லை நோக்கி ரஷியா மேலும் முன்னேறி செல்லும் பட்சத்தில் அதிபர் புதின் (ரஷியா) தான் இதுவரை கண்டிராத பொருளாதார தடைகளை பார்க்க நேரிடும் என்றார்.

## நிறைவுக்கு வருகின்றது பிளான் பி: இங்கிலாந்தின் பிரதமர் அறிவிப்பு!



இங்கிலாந்தின் பிளான் பி நடவடிக்கைகள் அடுத்த வியாழன் முதல் நிறைவுக்கு வருமென, பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, பொது இடங்களில் கட்டாயமாக முகக் கவசம் அணிவது மற்றும் கொவிட் கடவுச்சீட்டு இரண்டும் கைவிடப்படும்.

மக்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை அரசாங்கம் உடனடியாக கைவிடும் என்றும் பிரத மர் கூறினார்.

பூஸ்டர் தடுப்பூசிகள் காரணமாக இங்கிலாந்து ‘பிளான் ஏ’க்கு திரும்புகிறது மற்றும் மக்கள் பிளான் பி நடவடிக்கைகளை எவ்வாறு பின்பற்றினார்கள் என்று பிரதமர் விளக்கினார்.

ஓமிக்ரோன் அலை தேசிய அளவில் உச்சத்தை எட்டியுள்ளதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர் என அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார். டவுனிங் ஸ்ட்ரீட் ஊடக சந்திப்பில், சுகாதார செயலாளர் சஜித் ஜாவித் ‘இது நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய தருணம். நாம் அனைவரும் ஒன்றாக வேலை செய்யும்போது இந்த நாடு என்ன சாதிக்க முடியும் என்பதை இது நினைவூட்டுகிறது’ எனக் கூறினார்.

## போலந்து உணவகங்களில் தடுப்பூசி பெற்றாலே உணவு

## உரிமையாளர்கள் அதிரடி

போலந்தில் தடுப்பூசி செலுத்தியுள்ள வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்படுவதாக, வார்சா நகர உணவங்கள் தெரிவித்துள்ளன.

இதன்மூலம் தங்களது ஊழியர்களைக் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்க முடியுமென உணவங்கள் நம்புகின்றன.

வாடிக்கையாளர்கள் தங்கள் தடுப்பூசி சான்றிதழ்களை உணவகங்கள், அருந்தகங்கள் மற்றும் பிற இடங்களில் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதுபோன்ற நடவடிக்கை தடுப்பூசி போடுபவர்களின் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிக்கும் என்று மருத்துவக்குழு ஆலோசகரான பேராசிரியர் ராபர்ட் ஃபிளிசியாக் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கை தொடர்பாகப் பிரதமருக்கு ஆலோசனை வழங்கும் போலந்து மருத்துவக் சபையின் 17 உறுப்பினர்களில் 13பேர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

போலந்தில் சுமார் 56 சதவீதம் பேர்களுக்கே கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளன. இது ஐரோப்பிய ஒன்றிய அளவில் சராசரியை விட மிகக் குறைவாகக் கருதப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவானவர்கள் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி பெற்றுள்ளனர்




மணமகன் விபரம்

பிறந்த திகதி - 29.10.1987 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - செவ் - குற்றமில்லை
தகைமை - தொழில் - UK. Permanent Job
எதிர்பார்ப்பு - இலங்கை மணமகள்

பிறந்த திகதி - 10.05.1991 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - உத்திரட்டாதி 2ம் பாதம்
கி.பா - செவ் - குற்றமில்லை
தகைமை - தொழில் - U.S.A Engineer
எதிர்பார்ப்பு - இலங்கை மணமகள்

பிறந்த திகதி - 23.12.1974 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - ரேவதி
கி.பா - செவ் - குற்றமில்லை
தகைமை - தொழில் - கனடா
எதிர்பார்ப்பு - இலங்கை மணமகள்

பிறந்த திகதி -06.10.1989 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - கேட்டை
கி.பா - செவ் - 2 இல் செவ்வாய்
தகைமை - தொழில் - கனடா (விவாகரத்து)
எதிர்பார்ப்பு - யாழ்ப்பாண மணமகள்

மணமகள் விபரம்

பிறந்த திகதி - 06.08.1983 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - செவ் - 8 இல்
தகைமை - BA தொழில் - தபால் அலுவலகர்
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்

பிறந்த திகதி - 10.05.1988 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - சதயம்
கி.பா - செவ் - 12 இல்
தகைமை - தொழில் - தனியார்
எதிர்பார்ப்பு - உத்தியோகம் தனியார் மணமகன்

பிறந்த திகதி - 06.01.1990 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - செவ் - லக்கினத்தில்
தகைமை - தொழில் -கனடா
எதிர்பார்ப்பு - இலங்கை பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 15.09.1992 மதம் - இந்து
ஜாதி -V நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - செவ் - 7 இல்
தகைமை - Diploma Teaching Teacher எதிர்பார்ப்பு - சைவ உணவு உண்ணும் பழக்கமுடைய உத்தியோக மணமகன்

077 650 5097
077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா
0014166661855

# ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த் திட்ட இரண்டாம் கட்டப் பணிகள் தமிழக முதல்வர் காணொலி மூலம் ஆரம்பித்து வைத்தார்

ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகள் 4 ஆயிரத்து 600 கோடி ரூபா மதிப்பில் செயல்படுத்தப்பட இருப்பதாகவும், அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மாவட்டத்தில் நிறைவுற்ற 46 திட்டப்பணிகளின் செயற்பாடுகளை ஆரம்பித்தல், 591 புதிய திட்டப்பணிகளை தொடக்குதல், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நிகழ்வு தமிழக தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இனி என்னை யாராவது நீ என்ன சாதித்தாய்?, என்று கேட்டால், அதற்கான பதிலைப் பட்டியலிடும்போது அதில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் நிச்சயம் இருக்கும். கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மக்களின் மிகபெரிய குறையாக இருந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் கூட்டு குடிநீர் திட்டம், கலைஞர் கருணா நிதி ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டது. நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது எண்பது சதவீத பணிகள் நடைபெற்றன. பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இனி மீண்டும் இந்தத்திட்டம் தொடரப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது. இனிவரும் நாள்களில் சேலம் கோட்டையூர், தருமபுரி ஒட்டனூர் பகுதிகளுக்கு இடையே மேம்பாலம் அமைக்கப்படும். ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் 4 ஆயிரத்து 600 கோடி ரூபா மதிப்பில் செயல்படுத்தப்படும். அதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. தருமபுரியில் பால் உற்பதியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய பால் பதனிடும் நிலையமும் தர்மபுரியில் சிப்காட் தொழில் பூங்காவும் அமைக்கப்படும். தர்மபுரி ஆட்சியர் வளாகத்தில் நாற்பது கோடி மதிப்பில் கூடுதல் அலுவலக கட்டிடம் அமைக்கப்படும், என்று தெரிவித்துள்ளார்.

# சோதனைகளால் அ.தி.மு.கவை யாராலும் அழிக்க முடியாதென ஜெயக்குமார் ஆவேசம்



தி.மு.க. ஆட்சியையும் அதன் கண்களையும் உறுத்திக்கொண்டிருக்கும் அ.தி.மு.கவை எப்படியாவது அழித்து விட வேண்டும். அதன் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார்கள் தி.மு.க.வினர் என்று முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் வீட்டில் நடைபெறும் வருமான வரிச் சோதனை குறித்து முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் கூறியுள்ளார்.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில் மக்கள் மத்தியில் அ.தி.மு.க.வினர் லஞ்சப்பேர்வழிகள் என்ற தவறான தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு பொலிஸாரை ஏவி பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கி உள்ளது விடியாத அரசு.

பொங்கலுக்கு 21வகை பொருள்களை கொடுப்பதாக அறிவித்தார்கள். அது எந்த அளவுக்கு மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது என் பதை பொதுமக்கள் அதை தூக்கி வீசியதில் இருந்தே பார்க்க முடிந்தது.

உருகிய வெல்லம், மிளகில் பருத்திக்கொட்டை கலப்படம், கலப்பட மஞ்சள் என்று பரிசு குப்பைகளைக் கொடுத்து மக்களை ஏமாற்ற நினைத்தார்கள். ஆனால் மக்கள் ஏமாறவில்லை. மக்களின் கடும் கோபத்துக்கும், விமர்சனத்துக்கும் ஆளாகி உள்ள விடியாத அரசு அதை மறக்கடிக்க வைப்பதற்காக தான் ரெய்டு என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்துள்ளது. தங்கள் பெயரை காப்பாற்ற புது புது யுக்திகளைக் கையாண்டு வருகிறது. சீப்பை எடுத்து மறைத்து வைத்தால் திருமணம் நடக்காது என்று சிலர் நினைப்பார்களாம். அப்படித்தான் தி.மு.கவும் நினைக்கிறது.

அ.தி.மு.கவின் பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தவும் முடியாது. எந்த கொம்பனாலும் அழித்திடவும் முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.



# இந்தியா–ரஷ்யா கூட்டுத் தயாரிப்பு பிரமோஸ் ஏவுகணை பரிசோதனை

புதிய வகை பிரமோஸ் ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு நேற்று வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது.

ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் இந்த பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. திறன்களை நிரூபிக்கும் வகையில் பல புதிய உள்நாட்டு அமைப்புகளை இந்த ஏவுகணை உறுதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஏவுகணை இந்தியா-ரஷ்யா கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 10 லட்சம் பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி

பூந்தமல்லி அரசு வைத்தியசாலையில் முன்களப் பணியாளர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்றது.

இதனை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆரம்பித்து வைத்தார். இதைத்தொடர்ந்து அவர் பூந்தமல்லியில் உள்ள அரசு பொது சுகாதார நிறுவனத்தில் தனியார் நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள ஒக்சிஜன் உற்பத்திமையத்தையும் ஆரம்பித்துவைத்தார்.

பின்னர் அமைச்சர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அப்போது, பூஸ்டர் தடுப்பூசி போட்டுக் கொள்ளத் தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்ட வர்கள் 5 லட்சத்து 52 ஆயிரத்து 754 பேர். இந்த எண்ணிக்கை இந்த ஜனவரி இறுதிக்குள் 10 லட்சம் என்ற இலக்கைத் தொட இருக்கிறது.

இதனைச் செயல்படுத்த வியாழக்கிழமை தோறும் பூஸ்டர் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இது 600 இடங்களில் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் தடுப்பூசி போடும் பணி ஓர் இயக்கமாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு தடுப்பு முகாம்களிலும் 15 லட்சம் முதல் 30 லட்சம் வரையான தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. வருகிற சனிக் கிழமை 50 ஆயிரம் இடங்களில் தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது, என்று அவர் தெரிவித்துள்ளார்

# சதித்திட்ட செயல்களில் ஈடுபடும் தளங்கள் சட்ட நடவடிக்கை பாயுமென எச்சரிக்கை




இந்தியாவிற்கு எதிராக சதித்திட்ட செயல்களில் ஈடுபடும் இணையத்தளங்கள் மற்றும் யூடியூப் தளங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இந்தியத் தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு எதிரான பிரசாரம் மற்றும் போலிச் செய்திகளைப் பரப்பியதாகக் கூறப்படும் 20 யூடியூப் தளங்கள் மற்றும் இரு இணையத்தளங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

காஷ்மீர் பிரச்சினை, இந்திய இராணுவம், இந்தியாவில் உள்ள சிறுபான்மை சமூகங்கள், ஜெனரல் பிபின் ராவத் போன்ற தலைப்புகளில் போலி செய்திகள் பரப்பப்படும் தளங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஜனாதிபதியின் உரை

# யானை விழுங்கிய விளாம்பழம் போன்றது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கருத்து



ஜனாதிபதியின் உரையானை விழுங்கிய விளாம்பழம் போன்றது என திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டின் இக்கட்டான சூழ்நிலையில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைத்த ஜனாதிபதி, தனது கொள்கை அறிக்கையில் ஏன் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்பதைத் தெளிவுபடுத்துவார் என எதிர்பார்த்தால் அவர் தனது பழைய கதைகளையே மீண்டும் கூறி சென்றார்.

அவரின் உரை யானை விழுங்கிய விளாம்பழம் போன்றே இருந்தது.அதில் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு இல்லை. காஸ்சுக்கு வரிசை நீண்டு கொண்டே போகிறது. பால்மா வரிசை நகராமல் நிற்கிறது. சீமெந்தின் விலை ஆகாயத்தை தொடுகிறது. அரிசி இப்போது இருநூறு ரூபா இன்னும் சில மாதங்களில் 500 ஐத் தாண்டும் என கணிக் கப்படுகிறது. மரக்கறிகள் மருந்துப்பொருள்கள் என அனைத்துக்கும் தட்டுப்பாடு, விலைஉயர்வு ஏன் பலாக்காய்க்கு கூட சிறந்த விலையை இந்த அரசாங்கமே பெற்றுக்கொடுத்துள்ளது. தொடர்ச்சியான மின்சாரத் துண்டிப்பு. இன்னும் சில நாள்களில் கையிருப்பில் உள்ள எரிபொருளும் தீர்ந்துவிட்டால் எரிபொருள் வரிசை ஒன்றையும் எதிர்பார்க்கலாம். இப்படி நாடே அதள பாதாளத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும் போது ஜனாதிபதி சுபீட்சத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதி கூறும் சுபீட்சம் மக்களுக்கானதல்ல அது ராஜபக்ஷ சகோதரர்களுக்கும் அவர்களை சுற்றியுள்ள ராஜ தோழர்களுக்குமான சுபீட்சம்.

இந்தப் பிரச்சனைகளை எல்லாம் எதிர்க்கட்சியான நாம் சுட்டிக்காட்டினால் ஜனாதிபதி கோபம் கொள்கிறார்.

அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் அவரின் ஆட்சியிலேயே நெல்லை 90இற்கு மேல் வாங்கியதாக கூறினார்.

முப்பதாயிரம் ரூபாவுக்கு யூரியா வாங்கி விவசாயம் செய்ததை அவர் மறந்துவிட்டார் . 90 ரூபாவுக்கு நெல்லை விற்ற விவசாயி யாரும் அந்தப் பணத்தில் மாடி கட்டவில்லை . நெல்லை விற்றதும் அவனும் காஸ், பால்மா வரிசையிலேயே நிற்கிறான் .

இதுதான் இப்போது எமது நாட்டு மக்களின் நிலை. இதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். தமது இயலாமையை மறைக்க பலவீனமானவரே குறைகளைக் சுட்டிக் காட்டுபவர்களிடம் கோபம் கொள்வார்கள். ஜனாதிபதியால் இந்த இரண்டரை வருடங்களாக முடியவில்லை அவரின் செயற்பாடுகளைப் பார்த்தல் எஞ்சிய இரண்டரை வருடத்துக்கும் அவரால் முடியாது. – அவர் மொத்தமாக பெயில் எனத் தெரிவித்தார்.



# தீர்வே விடிவு எனும் தொனிப்பொருளில் பிரச்சினைகளை ஆராயும் கலந்துரையாடல்

கல்முனை தாருஸ்ஸபா அமையத்தினரின் ஏற்பாட்டில்,நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முாரப் அவர்களை சந்தித்து கலந்துரையாடும் நிகழ்வு தாருஸபா அமைய பிரதானி மௌலவி ஸபா முகம்மத் தலைமையில் கல்முனையில் இடம்பெற்றது.

கல்முனைப் பிரதேசத்தின் மக்கள் செயலணி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில், தீர்வை நோக்கிப் பயணப்படும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தீர்வைகளைப் பெற வேண்டும் தமது பிரதேசப் பிரச்சினைகள் மற்றும் தேவை களை எடுத்துரைத்தனர்.

தீர்வே விடிவு என்ற தொனிப்பொருளில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு களமாடும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வரவேற்பும் உற்சாகமும் வழங்கி, இந்நிகழ்வில் தாருஸ்ஸபா அமையத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

# எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு

## வர்த்தமானி வெளியிட கோருகிறது மக்கள் சக்தி

தொடர்சியாக இடம்பெற்று வரும் எரிவாயு வெடிப்புகளை கட்டுப்படுத்த காஸ்களை தர நிர்ணயம் செய்து அவை தொடர்பான வர்தமானி ஒன்றை வெளியிடும்படியும் காஸ் வெடிப்புக்களால் உயிரிழந்த, காயமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈட்டை பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தும் முகமாக நேற்று காலை நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் டி.எம்.எஸ். திஸ்ஸ நாயகவை சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப் பினர்களான முஜிபுர் ரஹ்மான், இம்ரான் மஹ்ரூப் மற்றும் நளின் பண்டார ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.



# பயிர் அழிவதற்கு முன் பசளை வழங்குங்கள் கொக்கட்டிச்சோலை விவசாயிகள் மனு

அறுவடைக்கு இன்னும் நான்கு வாரங்கள் இருக்கின்றன. ஆனால்எமக்குவழங்கப்பட வேண்டிய மானிய பசளையோ மானிய பசளைக்கான கொடுப்பனவோ இன்னும் வழங்கப்படவில்லை. எமது ஜீவாதாரமான பயிர் அழிந்துநாசமாகும் முன்னர் இவற்றை வழங்குமாறு வேண்டுகின்றோம்.என ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் கொக்கட்டிச்சோலை கமநலப் பிரிவுக்குட்பட்ட கிளாக்கொடிச்சேனை கமநலஅமைப்பு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

குறித்த அமைப்பின் தலைவர் சிவஞானம் அகிலேஸ்வரன் பொதுச்செயலாளர் வேலாப்போடி கணேசமூர்த்தி ஆகியோர் ஒப்பமிட்டு இம் மகஜரை அனுப்பியுள்ளனர். பிரதிகளை விவசாயஅமைச்சர் கிழக்கு ஆளுநர் தொடக்கம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்வரை அனுப்பப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு :-

எமது கண்டத்தில் சுமார் நூறு விவசாயிகளுக்கு இன்னும் பிரஸ்தாப மானிய பொட்டாசியம் குளோரைட் பசளையோ, பசளை மானியமோ இன்னும் கிடைக்கவில்லை. இதனால் உரிய பசளையின்றி ,பயிர்கள் மஞ்சள் நிறமாகி வீரியம் குறைந்துவருகிறது. அப்படியே விட்டால் பயிர் அழிந்து போகும். உரிய அதிகாரிகளிடம் கேட்டால் ' வந்தால் தருவோம்' என கைவிரிக்கிறார் கள். இன்னும் நான்கு வாரங்களில் பயிர் அறுவடை செய்யப்படும் இன்றைய நிலையில் உடனடியாக பசளையையும் மானியத்தையும் வழங்க ஆவன செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.ஜெகநாத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது – இந்தப்பிரச்சினை கொக்கட்டிச்சோலைக்கு மாத்திரமல்ல முழு மாவட்டத்திலும் உள்ளது. மாவட்டத்தில் இன்னும் சுமார் 3 ஆயிரம் பேருக்கு மானியப்பசளைக்கான கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். விரைவில் அது வரும். வந்ததும் குறித்த விவசாயிகளுக்கு உடனடியாக வழங்குவோம்.

இதேவேளை பொட்டாசியம் குளோரைட் பசளை நாட்டுக்கு 48ஆயிரம் மெற்றிக்தொன் தேவை. ஆனால் வந்ததோ 30 ஆயிரம் மெற்றிக்தொன். 18 ஆயிரம் மெற்றிக்தொன் தேவையாகிறது. எனவே இப்பசளைக்கான தட்டுப்பாடு என்பது மட்டக்களப்பிற்கு மட்டுமல்ல முழு நாட்டிற்குமுரியது. எம்.ஓபி பசளைக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. எமக்கு பசளை கிடைத்தால் வழங்குவோம். என்றார்.



# முதலாவது அரபு மொழிப் பேராசிரியராக கலாநிதி எம்.எஸ்.எம். சலீம் பதவியுயர்வு

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு மொழி மற்றும் இஸ்லாமிய நாகரீகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.எம். சலீம் அரபு மொழி பேராசிரியராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி கிராமத்தை சேர்ந்த பேராசிரியர் எம்.எஸ்.எம். சலீம் மாவடிப்பள்ளி முஸ்லிம் கலவன் பாடசாலையில் தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்து அங்கேயே ஆரம்பக் கல்வியை நிறைவு செய்தவர் . பின்னர் கல்முனை அல் ஹாமியா அரபுக் கல்லூரியில் கற்றதன் பின்னர் இந்தியாவின் லக்னோ தாருள் உலூம் நத்வதுல் உலமா அரபுக் கல்லாசாயின் அரபு மொழி மற்றும் இலக்கிய பீடத்தில் கற்று முதலாம் நிலை அதிவிசேட சித்தியுடன் தனது இஸ்லாமிய கற்கையை நிறைவு செய்தார். 1999ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் எம்.எஸ்.எம். சலீம் அவர்கள் 2002 இல் அரபு மொழியில் விடே இளங் கலைமானிப் பட்டத்தை பெற்றார். 2004 ஆம் ஆண்டு அரபு மொழியில் முதுகலைமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதோடு, 2012 ஆம் ஆண்டு உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றான மலேசியாவின் மலாயாப் பல்கலைக்கழகத்தில் அரபு மொழியியலில் கலாநிதிப் பட்டத்தையும் நிறைவு செய்தார். பேராசிரியரின் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுக்கு விசேட திறமையை வெளிப்படுத்தியமைக்கான திறமை விருது பல்கலைக்கழகத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிபிடத்தக்கது.

# தமிழர்கள் அயல் நாடுகளிடம் நீதி கேட்பதில் என்ன தவறு?

## வினோ நோகராதலிங்கம் எம்.பி. கேள்வி

யுத்த காலத்தில் அரசாங்கமாக உலக நாடுகளிடம் ஆயுத உதவி கேட்டீர்கள் இப்போது உலக நாடுகளிடம் கடன் கேட்கின்றீர்கள். ஆனால், நாம் எமது அரசியல் உரிமையைப் பெற்றுத்தருமாறுதான் அயலில் உள்ள வல்லரசு நாட்டிடம் கேட்கின்றோம். நாம் அயல் நாடுகளிடம் நீதி கேட்பதில் என்ன தவறு உள்ளதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான வினோ நோகராதலிங்கம் கேள்வி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரைமீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு –

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசின் பொருளாதார, அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கொள்கைகளை மறந்து உதவி செய்ய வேண்டும்.

ஆதரவு தர வேண்டுமெனக் கேட்டுள்ளார். இது வேடிக்கையான விடயம். ஐந்து சதத்துக்குக் கூடப் பெறுமதியில்லாத கொள்கை விளக்க உரையை ஆற்றிவிட்டு,எங்களுடைய மக்களை முட்டாள்களாக்கிவிட்டு, ஏமாற்றிவிட்டு தங்களுக்கு ஆதரவு தரவேண்டுமெனக் கேட்கின்றமை கேலிக் கூத்



தானது. 'உனக்கில்லடி உபதேசம் ஊருக்குத்தான்" என்பது போல் இங்கே ஜனாதிபதி உரையாற்றுகின்றார். அதே நேரத்தில் எங்களுடைய மண் ஆக்கிரமிக்கப் படுகின்றது, கபளீகரம் செய்யப்படுகின்றது, ஜனாதிபதி உரையாற்றுகின்ற வேளையில் கூட இராணுவத்தினர், தொல்பொருள் திணைக்களத்தினர், வனத் திணைக்களத்தினர், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் எனப் பல தரப்பினர் எமது மண்ணை ஆக்கிரமிக்கப் படுவதற்கு நாங்கள் அவருக்கு உதவி செய்ய வேண்டும் எனக் கோருகின்றார்.

நாம் பெயரளவில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றோம். வன்னி மண்ணில் இருக்கின்ற அரசு ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அந்த மாவட்டங்களின் இணைத் தலைவர்கள் எம்மைப் புறக்கணித்து தன்னிச்சையாக, தாங்கள் நினைத்தவாறாகச் செயற்படுகின்றார்கள்.

அரச அதிபர்கள். பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் இந்த அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழுத்தங்களுக்கு நெருக்கடிகளுக்கு ஆளாகின்றனர். இதேவேளை, இந்தியப் பிர தமர் மோடிக்கு நாம் எமது மக்களின் பிரச்சினைகளைச் சொல்லி , 13 ஆவது அரசமைப்புதிருத்தத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டுமெனவும் மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கைகளை விடுத்தோம். அதற்கான ஆவணத்தைக் கையளித்துள்ளோம். அதைப் பார்த்தது நீங்கள் எங்களு டன்தான் பேச வேண்டும். இந்தியாவிடம் கேட்டுப் பயனில்லை யென இங்குள்ள அமைச்சர்கள் கூறுகின்றனர்.

யுத்தத்தின் போது சர்வதேச நாடுகளிடம் ஆயுத உதவி, நிதி உதவி கேட்ட அரசு, எமது பிரச்சினைகளைத் தீர்க்காத பட்சத்திலேயே நாம் எமது அயல் நாடான இந்தியாவிடம் எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு கோருகின்ற போது இங்குள்ள அமைச்சர்கள் கொக்கரிக்கின்றனர். இந்தப்பிரச்சினை நீங்கள் தீர்க்க வேண்டிய பிரச்சினை.

இந்த அரசு எமது பிரச்சினையைத் தீர்த்திருந்தால் நாங்கள் ஏன் இந்தியாவிடம் போகப்போகின்றோம்? நீங்கள் உலக நாடுகளிடம் பிச்சை எடுக்கின்றீர்கள். நிதி கேட்கின்றீர்கள், கடன் கேட்கின்றீர்கள். ஆனால் நாம் எமது அரசியல் உரிமையைப் பெற்றுத் தருமாறுதான் அயலில் உள்ள வல்லரசு நாட்டிடம் கேட்கின்றோம். – என்றார்.



# முதலீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்த தென் கொரியா ஒத்துழைப்பு வழங்கும்

## அந்நாட்டு சபாநாயகர் உறுதி

வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு தென் கொரிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்று, அந்நாட்டு தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் – சியோக் தெரிவித்துள்ளார்.

பார்க் பியோங்–சியோக் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் நேற்று (வியாழக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

பார்க் பியோங்–சியோக், கொரியா குடியரசின் 21 ஆவது தேசிய சபையின் சபாநாயகர் ஆவார். ஆசியாவின் கேந்திர நிலையமான இலங்கைக்கு, ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள கொரிய முன்னணி நிறுவனங்களை ஊக்குவிக்குமாறு பார்க் பியோங்–சியோக்கிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

சுமார் 22 ஆயிரம் இலங்கையர்கள் தென் கொரியாவில் தொழில் புரிகின்றமையுடன், அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் உயர் தொழில் பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். இலங்கைத் தொழிலாளர்களுக்கு தொழில் சந்தையில் அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பியோங்– சியோக், ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் தொழில் பயிற்சிகளை மேம்படுத்துவதற்கும் கொரிய அரசாங்கத்தின் உதவிகளை வழங்குவதற்கும் தென் கொரிய சபாநாயகர் உடன்பட்டதுடன், இந்நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப அவற்றை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# பிரியந்தவின் குடும்பத்துக் ஒரு லட்சம் டொலர் பாகிஸ்தான் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது

பாகிஸ்தானின் சியொல்கொட்டில் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் அமெரிக்க டொலர், அதாவது இலங்கை மதிப்பில் 2 கோடியே 2 லட்சத்து 48 ஆயிரம் ரூபா உதவித் தொகை பாகிஸ்தான் அரசாங்கத்தால் வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக 10 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் பிரியந்த குமாரவின் சம்பளப் பணம் கொடுக்கப்படவுள்ளது.

கொழும்பு 7 இல் அமைந்துள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தில் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூக் தலைமையில் நடைபெற்ற விசேட நிகழ்வின்போதே இந்த உதவித் தொகை வழங்கப்பட்டது.

ஒரு லட்சம் அமெரிக்க டொலருக்கு மேலதிகமாக எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு உயிரிழந்த பிரியந்த குமார பெற்று வந்த சம்பளப் பணம் மாதம் தோறும் வழங்கப்படும் என உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூக் தனது உரையில் கூறியிருந்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

பிரியந்த குமாரவின் கொலைச் சம்பவம் மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். அவரின் பிரிவால் வாடும் பிரியந்தவின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.




இந்தத் துயரச் சம்பவம் தொடர்பான செயற்பாடுகளை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் விரைந்து செயற்பட்டு வருகிறார். மேலும், இரு நாட்டு உறவுகள் மேலும் வலுப்பெறுவதற்குப் பிரதமர் இம்ரான் கானும் பாகிஸ்தான் மக்களும் உறுதிகொண்டுள்ளனர்.

உலகில் எந்த மதமும் வன்முறையைப் போதிப்பதில்லை. மகாத்மா காந்தி ஓர் இந்துவால் கொல்லப்பட்டார். அன்வர் சதாத் முஸ்லிம் ஒருவரால் கொல்லப்பட்டார். சாந்தி, சமாதானத்தையே இஸ்லாம் மதம் போதிக்கிறது. உலகில் வாழும் ஒவ்வொருவரும் சாந்தி, சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் இறைத் தூதர் முஹம்மது நபி கூறிய வழியைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த பிரியந்த குமாரவின் மனைவி நிலூஷி மற்றும் அவரது இரண்டு மகன்மார்களுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல்வாதிகளும், அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்ட தேரர்கள், இஸ்லாம் மதத்துக்கான பிரதமரின் இணைப்பாளர் ஹசன் மௌலவி, இந்து மதத்துக்கான பிரதமரின் இணைப்பாளர் பாபு சர்மா, கத்தோலிக்க குருவானவர் சிக்ஸ்ட்டன் குருகுலசூரிய, அகில இலங்கை ஜம் இயத்துல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி உள்ளிட்ட ஆன்மீகத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் ஆறுதல் தெரிவித்தனர். இந்த நிகழ்வின்போது கருத்து தெரிவித்த பிரியந்த குமாரவின் மனைவி நிலூஷி –

பௌத்த மத தர்மத்தில் போதித்துள்ளதன்படி பலி வாங்குவது நல்லதல்ல. இதனையே எனது இரண்டு பிள்ளைகளுக்கும் அறிவுரையாகக் கூறி வளர்க்கிறேன். இருப்பினும் எனது கணவரைக் கொலை செய்த கொடூர கொலையாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டும். ஏனெனில், இது போன்ற துயரச் சம்பவம் உலகில் எங்கேயும் இடம்பெறக் கூடாது. இந்த விவகாரம் தொடர்பாக செயற்பட்ட பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2022இல் வெளியிடப்பெற்றது.